# In the Court of Judicial Magistrate No.II Court, Cuddalore.

STC.485/2018

பெயர்- மரகதவல்லி

கணவர் பெயர்- மணிவாசகம்

(எதிரி ஆஜர்)

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள மனு, வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றை நான் சொல்லிதான் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனு உண்மையா அல்லது வழக்கறிஞர் அறிவிப்பில் சொன்ன சங்கதிகள் உண்மையா என்றால் இரண்டும் உண்மைதான். மனு அல்லது வழக்கறிஞர் அறிவிப்பு ஏதாவது ஒன்றில் கூறிய சங்கதிதான் உண்மை என்றால் சரியல்ல. 13.04.2009 என்னிடம் காசோலை வழக்கப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2009 காலகட்டங்களில் காசோலையை 6 மாதத்திற்குள் வங்கியில் செலுத்த வேண்டும் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த மனுவில் 2018 ல் வங்கியில் காசோலையை செலுத்தி பணம் பெற்றுக்கொள்ள கூறியுள்ளதாக சொன்னால் சரிதான். எனக்கு 3 மகள்கள் உள்ளனர். முதல் மகளுக்கு 2009 திருமணம் நடைபெற்றது. 2 வது மகளுக்கு 2018 ல் திருமணம் நடைபெற்றது. 3 வது மகளுக்கு 2024 ல் திருமணம் நடைபெற்றது. 2 வது மகளுக்கு 2013 ல் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். நான் 2013 முன்பு தான் எதிரியிடம் சென்று பணம் கேட்டேன் என்று சொன்னால் சரிதான். 2013 முதல் எனக்கும் எதிரிக்கும் எந்த வித பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். 2009 ல் கொடுத்த காசோலையை ஏன் 2013 லேயே வங்கியில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எதிரி கையில் பணம் தருவதாக கூறினார் அதனால் வங்கியில் செலுத்தவில்லை. 2013 முதல் எதிரியிடம் நேரடியாகவோ கைபேசி மூலமாகவோ எந்த வித பேச்சு வார்த்தை இல்லை என்று சொன்னால் எதிரியின் மகளின் திருமணத்திற்கு எதிரி வந்து அழைத்தார் நான் போகவில்லை. 2009 லேயே நான்கு சகோதரருக்கும் காசோலைக்கான பணம் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 2009 லேயே காசோலைக்கு உண்டான பணம் எதிரியிடமிருந்து பெறப்பட்டதினால் தான் 2009 முதல் 2018 வரை எந்தவிதமான காசோலைக்கு உண்டான தொகையையும் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 01.08.2018 அன்று எதிரியிடம் பணம் கேட்டதாகவும் பூர்த்தி செய்து கொள்ள

சொன்னதாகவும் வழக்கிற்காக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் இன்னொரு சகோதரான திரு. சண்முகம் பேசிக்கொண்டு இருப்பதாக சொன்னால் சரிதான். பாகபத்தியம் 2009 ல் எழுதிக்கொடுத்தது சண்முகத்திற்க்கும் சங்கரலிங்கத்திற்க்கும் சேர்த்து எழுதி கொடுத்தது தான் என்று சொன்னால் சரிதான். மற்றொரு சகோதரான சண்முகத்திடம் நான் எந்த தொகையையும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டேன் பின்னர் கொடுப்பதாக கூறினார். மற்றொரு சகோதரி சரளா என்பவருடன் சகசமாக பேசிக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். சரளாவின் கணவர் தாஸ் என்பவர் எதிரியின் குடும்பத்தின் மீது உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். சண்முகத்தின் மகளை சரளாவின் மகனுக்கு தான் திருமணம் செய்து வைத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்க்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய தொகையை 2009 லேயே கொடுத்தது விட்டார் என்றும் தற்போது தாஸ் ன் துாண்டுதலின் பேரில் எதிரிக்கு மனஉளைச்சல் ஏற்படுத்த வேண்டும் என்பதன் பேரில் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. இந்த வழக்கில் கால தோஷத்தினால் பாதிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரி எந்த வித தொகையையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

BUVANESHKUMAR Digitally signed by BUVANESHKUMAR
Date: 2025.07.22 17:44:20 -0500

நீதித்துறை நடுவர் எண்.-2,

கடலூர்.